# ஸ்ரீ அருணாசல நவமணிமாலை

1. பரமேச்வரன் சுபாவத்தில் சலனமற்றவனே ஆனாலும், சிதம்பர* பொற்சபையில் பராசக்தியின் எதிரில் நடனம் ஆடுகின்றார். ஆனால் அந்தப் பராசக்தி, இங்கு அருணாசல சொரூபத்தில் ஒன்றி ஒடுங்கவும், இந்த க்ஷேத்திரம் மிகுந்த சிறப்புடன் ஓங்கி ஒளிர்கின்றது என்று அறிக.

* தீக்ஷிதர் ஒருவர்; ஆகாயத் தலமான சிதம்பரமே உயர்ந்த தலம், ஆகவே நடராஜரை தரிசிக்க சிதம்பரம் வருக என்று ஸ்ரீபகவானை அழைத்தபோது அரணாசலத்தின் பெருமையை அவருக்கு அறிவிக்க ஸ்ரீபகவான் எழுதியது.

2. செம்பொன் போல ஒளிவீசும் ஜோதி சொரூபமானதும், நினைத்த மாத்திரத்தில் முக்தியை அளிக்கக் கூடியதுமான அருணசல என்ற பதத்தில் அருண என்பதன் பொருள்: சத்-சித்-ஆனந்தம்; ஜீவ-பிரம்ம-ஐக்கியம்; அது நீயாக இருக்கிறாய் (தத்வமசி) என்பதாகும். ‘அசல’ என்றால் மிகவும் மகிமையும், மாண்பும் உடையதாம்.

3. கருணைக் கடலாகிய அருணாசல இறைவனின் செந்தாமரை திருவடிகளின் அருளையே நாடி நிற்கும் பக்குவிகள், இந்த உலகில் வாழும் போதே ஊர், உடமை, உறவினர், ஜாதி, வர்ணம் ஆகியவற்றில் மோகத்தை ஒழித்து, எப்போதும் தெளிவையே நாடிய உள்ளத்தால் அஞ்ஞானம் அழியப்பெற்று, உதய சூரியனின் கிரணங்களைப் போன்ற அருளை அடைந்து எப்போதும் பேரின்பக் கடலில் மூழ்கியிருப்பர்.

4. அருணாலேச்வரனே! எனது கண்களுக்கு இனிமையானவனே! பெண், ஆண், அலி என்னும் பேத உருவங்களைக் கடந்தவனே! உன்னை நினைக்காதவன் என்று, என்னை நீ அண்ணாந்து ஏங்கும்படி செய்யாதே. மண்ணோடு மண்ணாய்ப் போகும் இந்த உடலையே நான் என்று எண்ணி, நான் மண்ணாக மடிந்துபோவது

ஸ்ரீ

# அருணாசல நவமணிமாலை

(வெண்பா)

1. அசலனே யாயினு மச்சவை தன்னி
லசலையா மம்மையெதி ராடு – மசல
வுருவிலச் சத்தி யொடுங்கிட வோங்கு
மருண சலமென் றறி.

(கட்டளைக் கலித்துறை)

2. சத்திய சிற்சுக மன்றிப் பரவுயிர் சாரயிக்க
மார்த்தவத் தத்வ மசியரு ணப்பொரு ளாமசலத்
தார்த்தங் கனமது வாகுஞ்செவ் வாடக வாரொளியா
முத்தி நினைக்க வருளரு ணசல முன்னிடவே.

(விருத்தம்)

3. அருண சலத்திலுறு கருண கரப்பரம
னருணர விந்த பதமே
பொருணடு சுற்றமொடு வருணதி பற்றியுள
மருணட லற்று நிதமுந்
தெருண டுளத்தினின லருணடி நிற்குமவ
ரிருணச முற்று புவிமேற்
றருண ருணக்கதிரி னருணரு முற்றுசுக
வருணல யத்தி லிழிவார்.

(வேறு)

4. அண்ண மலையுனை யெண்ண னெனவெனை
யண்ணந் தேங்கிட வெண்ணதே
மண்ண மலவுட லெண்ண வகமென
மண்ண மாய்ந்திட வொண்ணதே

உன் அருளுக்கு ஏற்புடையது அல்ல. குளிர்ச்சி மிகுந்த உன் கருணை நோக்கால் என்னைக் கடாக்ஷித்து, வஞ்சனை செய்யாது, ஜோதி உருவாகிய பரமேச்வரனே! எனது உள்ளத்தில் விளங்குவாயாக.

தண்ணு ரளிசெறி கண்ணு டொருகிறி
பண்ணு தென்னிரு கண்ணுளா
பெண்ணு ணலியுரு நண்ணு வொளியுரு
வண்ணு லென்னக நண்ணுயே.

5. 'அருணாசலம்' என புகழுடன் சிறந்து விளங்கும். ஞானவடிவம் ஆகிய பரமேச்வரனே! சிறியவனாகிய நான் செய்த பெரும் பிழைகளைப் பொருட்படுத்தாது, என்னை ரக்ஷித்து, அஞ்ஞானமய உலக பந்தங்களில் நான் வீழ்ந்து மாய்ந்து போகாவண்ணம், மேகம் போன்று வர்ஷிக்கும் உன் கருணை கடாக்ஷத்தை அருள்வாயாக. இல்லாவிடில் கொடிய பிறவி எனும் துன்பக் கடலிலிருந்து மீண்டு முக்திக் கரையை நான் அடைய மாட்டேன். ஒருதாய் தன் குழந்தைக்குச் செய்யும் நிகரில்லாத நன்மைகளைப் போன்று நீயும் எனக்கு அருள்வாயாக.

(வேறு)

5. சீரான சோணகிரி சிறக்க வாழுஞ்
சிற்சொருப ஞுமிறையே சிறிய னேன்றன்
பேரான பிழையெல்லாம் பொறுத்துக் காத்துப்
பின்னுமிவன் பாழிதனில் வீழா வண்ணங்
காரான கருணைவிழி கொடுப்பா யின்றேற்
கடும்பவத்தி னின்றுகரை யேற மாட்டே
னேரான துண்டோதாய் சிசுவுக் காற்று
நிகரற்ற நலனுக்கு நிகழ்த்து வாயே.

6. அருணாசலேச்வரனே! நீ காமனை எரித்தவன் (காமாரி) என்று பக்தர்களால் போற்றப்படுகின்றாய். ஆம்! ஆம்! இது உண்மையே என்றால் உனக்கிந்தப் பெயர் பொருத்தம்தானா என்று சந்தேகப்படுகின்றேன். இப்பெயர் உனக்குப் பொருத்தமாயின், எவ்வளவுதான் வீரமும் துணிவும் உடையவன் ஆனாலும், அந்த சரீரமற்ற காமனை எரித்தவனாகிய, உன் பாதத்தையே பாதுகாப்பாகக் கொண்ட பக்தனின் மனதில் அந்தக் காமன் எப்படிப் புக முடியும்.

(வேறு)

6. காமாரி யென்றுநீ யன்பரா லென்றுமே
கதித்திடப் படுகின்ரு
யாமாமெ யுனக்கிது வாமாவென் றையுறு
மருணை லேச்சுரனே
யாமாயி னெங்ஙனந் தீரனே சூரனே
யாயினும் வல்லனங்கன்
காமாரி யாகுமுன் காலரண் சரண்புகு
கருத்தினுட் புகவலனே.

7. அண்ணாமலையானே! அடியவனாகிய என்னை என்று நீ ஆட்கொண்டாயோ அன்றே, எனது உயிரையும் உடலையும்* அடிமையாக்கிக் கொண்டாய். எனக்கு இனி ஒரு குறையும் இருக்க முடியுமோ? உன்னை அன்றி குணங்களையும் குறைகளையும் சிந்திக்க மாட்டேன். என் உயிருக்கும் உயிரே! உனக்குப் பிரியமானது எதுவோ அதையே நீ எனக்கு செய்தருள்வாய். கண்ணுக்கும் கண்ணான தெய்வமே! உனது திருவடித் தாமரைகளில் பக்திப் பெருக்கைத் தந்து அருள்வாயாக.

(வேறு)

7. அண்ணு மலையா யடியேனை
யாண்ட வன்றே யாவியுடற்
கொண்டா யெனக்கோர் குறையுண்டோ
குறையுங் குணமு நீயல்லா
லெண்ணே னிவற்றை யென்னுயிரே
யெண்ண மெதுவோ வதுசெய்வாய்
கண்ணே யுன்றன் கழலிணையிற்
காதற் பெருக்கே தருவாயே.

---

* உடல், பொருள், ஆவி கொண்டாய் என்று பாடுவதுதானே பண்டைய மரபு! தாங்கள் ஆவி, உடல் என்று மட்டுமே பாடிய காரணம் என்ன என்று அன்பர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பகவான் "பொருளோ எம்மிடம் இல்லை. அதனால் பாடவில்லை. என்னிடம் இல்லாத பொருளை இருப்பதாக பாவித்து எடுத்துக் கொள்ள சொல்ல வேண்டுமா? என்று விளக்கிப் புன்னகை பூத்தார்.

8. இந்த உலகில் உள்ள சிவ க்ஷேத்திரங்களுக்குள் சிறந்த திருச்சுழியில் உள்ள தர்ம தம்பதியரான சுந்தரமய்யர் – அழகம்மையருக்கு நான் பிறந்தனன். உலக வாழ்வில் புலன்களின் கொடுமையில் துன்பப்படும் முன்னமே எனது உள்ளம் பேரின்பத்தில் தழைக்கும்படியாக, உலகில் ஞான ஒளிபரவவும், சொரூபப் பிரகாசம் செழிக்கவும் விளங்கும் செம்பொருப்பு செம்மலாம் அருணாசலன்.தனது சிவ சாயுச்சியப் பதவியை எனக்குத் தந்தருளினான்.*

9. ஞான தேஜோமய அருணாசலனே! நீயே தாயாகவும் தந்தையாகவும் இருந்து, என்னை பிறப்பித்துக் காத்தருளினாய். மகாமாயையென்னும் பிறவிக் கடலில் விழுந்து நான் மூழ்கிப் போகும் முன்னம், நீ என் மனத்தின்கண் தோன்றி, என்னை உன்பால் ஈர்த்து உன் சொரூப நிலையில் அமர்வித்தனையே! உனது திருவருளின் விந்தை என்னென்று சொல்லுவேன்!

(வேறு)

8. புவிக்குட் பொங்கிடும் புவிச்சொற் புங்கவன்
புரிக்குட் புண்ணியன் சுழிக்குட் **சுந்தரன்**
றவற்குச் **சுந்தரஞ்** சதிக்குற் பன்னனந்
தலத்திற் புன்புலன் சழக்கிற் றுன்புறுந்
தவிக்குத் துஞ்சிடும் படிக்குத் தன்னுளந்
தழைக்கத் தன்பத மெனக்குத் தந்தனன்
சிவக்கச் சின்மயஞ் செழிக்கத் தன்மயஞ்
செகத்திற் றுன்னுசெம் பொருப்புச் செம்மலே.

(கட்டளைக் கலித்துறை)

9. அம்மையு மப்பனு மாயெனைப் பூமியி லாக்கியளித்
தம்மகி மாயையெ னாழ்கடல் வீழ்ந்துயா னாழ்ந்திடுமுன்
னென்மன மன்னி யிழுத்துன் பதத்தி லிருத்தினையால்
சின்மய னாமரு ணாசல நின்னருட் சித்ரமென்னே.

* சிங்கள ராஜன் தந்த பரிசுகளைப் பற்றி ஒட்டகூத்தர் எழுதிய பாடல் ஒன்றை ஈஸ்வர சுவாமிகள் ஸ்ரீ பகவானிடம் காட்டி, அருணாசலன் பகவானுக்கு என்னென்ன பரிசுகள் கொடுத்தான் என்று அதே சந்தத்தில் பாடித் தருமாறு கோரினார். அப்போது ஸ்ரீபகவான் ''தன்னுளம் தழைக்கத் தன்பதம் எனக்குத் தந்தனன்'' என்று பாடியருளினார்.